# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.88/2017

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU.

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-10 |
| Name | : Karthikeyan |
| Father's Name | : Iyamperumal |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2021.

**முதல் விசாரணை.**

நான் தற்போது கண்காணிப்பாளராக வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடை மேலாண்மை ஆணையரகத்தில் இருந்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு இரண்டு வட்டாட்சியர் பயிற்சி பெறுவதற்கு காஞ்சிபுரம் மாவட்டதிற்க ஒதிக்கீடு செய்யப்பட்டேன். முதல் 5 மாதங்கள் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக ஆலந்தூர் வட்டத்தில் பணிபுரிந்தேன். அதன் பின்னர் ஒரு மாத காலம் சென்னை காவல்துறை ஆணையர் அலுவகத்தில் காவல் பணி பயிற்சி பெற்றேன். அதன் பின்னர் ஆறு மாத காலம் ஆலந்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சிறப்பு நீதித்துறை நடுவராக பயிற்சி பெற்றேன். மொத்தம் ஒரு வருடம் காலம் போக மீதியுள்ள ஒரு வருட காலம் தாம்பரம் வட்டத்தில் வட்டாட்சியராக பயிற்சி பெற்றேன். எனது வட்டாட்சியர் பயிற்சி காலத்தில் தாம்பரம் எல்லைக்குட்பட்ட சிட்லபாக்கம் கிராமத்தில் காமராஜர் காலணியை சேர்ந்த நாராயணசாமி என்பவரின் மகன் நடராஜன் என்பவர் சர்வே எண் 189 /1ல் போலியாக பட்டா (பட்டா எண். 585) பெற்றது குறித்து மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடைப்பெற்று அவ்வழக்கில்

பட்டா போலியானது என தீர்மானித்து இதனை தீர விசாரிக்கும்படி சிபிசிஐடி போலீஸ்சாருக்கு உத்தரவிடப்பட்டது. அதன் பேரில் சி.பி.சி.ஐ.டி போலீஸசார் நான் மேற்படி பணியில் இருந்த காலத்தில் என்னை நேரில் சந்தித்து விசாரணை செய்தார்கள். அப்போது இப்பட்டா வழங்கிய முன் கோப்புகளை வழங்கும்படி கேட்டார்கள். அதனை தேடி பார்க்கும் போது டிஸ் ஆர்பிடி எண்.3224/2000 எண்ணும், டிஸ் ஆர்பிடி எண்.3326/2000 கோப்புகளை தேடி பார்த்ததில் அது பிரிக்கப்படாத ஒருங்கிணைக்கப்பட்ட தாம்பரம் வட்டத்தை சார்ந்தது என்றும், 3224/2000 என்ற கோப்பில் வழங்கப்பட்ட பட்டா எண். 585 பள்ளிக்கரணை கிராமத்தை சார்ந்தது என்றும், 3326/2000 என்ற கோப்பில் வழங்கப்பட்ட பட்டா எண். 585 மடிப்பாக்கம் II. கிராமத்தை சார்ந்தது என்று தெரியவந்தது. இதிலிருந்து மேற்படி இரண்டு பட்டாக்களும் தாம்பரம் வட்டத்திற்கு உட்பட்ட சிட்லபாக்கம் கிராமத்திற்கு சார்ந்தவை இல்லை என்றும், அவை போலியானவை என்று தீர்மானித்து சிபிசிஐடி போலீஸசாரிடம் அவர்கள் கோரியப்படி நகல்கள் வழங்கப்பட்டது. மேலும் இப்போலி பட்டா வழங்கிய 2000 ம் ஆண்டு பணிபுரிந்த திரு. லோகநாதன், கிராம நிர்வாக அலுவலகர், மற்றும் திரு. சுவாமிநாதன் தலைமையிடத்து துணை வட்டச்சியராகவும், மண்டல வட்டாட்சியராகவும் பணிபுரிந்ததாகவும் தெரிய வந்தது. இவர்களது கையெழுத்தினை கைரேகை நிபுணர்களுக்கு அனுப்பிவைத்து ஒப்புகை செய்ய வேண்டும் என்று சிபிசிஐடி போலீஸ்சார் கோரிக்கை விடுத்ததின் பேரில் அவர்கள் கையெழுத்துயிட்ட முன் கோப்புகளை ஆதாரமாக கொடுத்தேன். நான் வழங்கிய டிஸ் ஆர்பிடி எண்.3224/2000 என்ற அலுவலக கோப்பின் உண்மை நகல்கள் என்னால் சான்று அளிக்கப்பட்டு போலீஸ்சிடம் கொடுக்கப்பட்டது. அந்த ஆவணத்தின் ஒலி நகல் சான்று ஒப்பத்துடன் குறியீடு செய்ய எதிரி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. அசல் ஆவணங்கள் நீதிமன்த்தில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்ட பின்னரே குறியீடு செய்ய இயலும் என ஆட்சேபனை செய்யப்பட்டது.

அரசு தரப்பில் அந்த அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்பீடு செய்ய ஆஜர் செய்வதாக கேட்டு அவகாசம் வேண்டியதின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.